**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.257/2025</u>**

ம.சா.1 திருமலை த/பெ பெருமாள் நாள் : 20.07.2026

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இறந்தவர் என்னுடைய அப்பா. TVS Jupiter வாகனம் வைத்திருந்தார். விபத்து சமயத்தில் அந்த வாகனத்திற்கு காப்பீடு செய்யப்பட்டு இருந்தா என்றால் இல்லை. அவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது, அதை நான் தாக்கல் செய்வேன். ஜோலார்பேட்டையில் இருந்து திருப்பத்தூர் நோக்கி வந்து கொண்டிருந்த போது வெங்கட்ரமணபாபு என்பவர் பின்புறம் வந்து பக்கவாட்டில் மோதிவிட்டார். என் அப்பாவிற்கு 55 வயது. எனக்கு 30 வயது. நான் நேரில் பார்க்கவில்லை. மாலை 4 மணியளவில் விபத்து ஏற்பட்டதாக தகவல் கிடைத்தது. விபத்திற்கு பின்னர் திருப்பத்தூர் அரசு மருத்தவமனையில் விபத்து இடத்திற்கு அருகில் இருந்தவர்கள் சேர்த்துள்ளனர். சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். எதற்காக சிஎம்சி மருத்தவமனைக்கு அழைத்து சென்றோம் என்றால் தலையில் அடிப்பட்டதால் அழைத்து சென்றோம். அதன் பிறகு இராமச்சந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சிமென்ட் கடை நடத்தி வந்தார். பில்டிங் கான்ட்ராக்டராக வேலை செய்து வந்தார். அதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா ஒரு மாதத்திற்கு ரூ.30,000/- சம்பாதித்து வந்தார் என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் வயது முப்பின் காரணமாகவும் இருசக்கர வாகனத்தை தடுமாறி தான் ஓட்டுவார் என்றும், அதனால் நிலைதடுமாறி கீழே விழுந்து இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. என் அப்பாவின் இருசக்கர வாகனத்தின் வலது பக்கம் லேசான சேதம் காணப்பட்டது. முன் சக்கரம் உடைபடவில்லை. என் அப்பாவும், 1 எதிர்மனுதாரரும் எதிர் எதிரே மோதவில்லை என்றால் சரிதான். என்

அப்பாவின் தவறினால் விபத்து ஏற்பட்டதால் அதனால் எதிர்மனுதாரரிடம் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.